DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No. 303/2023**
**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **பிரபாகரன்** | Caste | : | |
| Father Name | : | **நடராஜ்** | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **10.04.2026.**

**PW - 5**

**(**எதிரி ஆஜர்**)**

**முதல் விசாரணை**

நான் திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், வேளகாநத்தம், ராக்கம்பட்டியில் குடியிருக்கிறேன். செங்கல் சூளையில் தொழிலாளியாக வேலை செய்கிறேன். 03.09.2022 அன்று பழைய மணல் ரீச் அருகே உள்ள மோகனசுந்தரம் செங்கல் சூளை பக்கத்தில் நானும் சாட்சி மோகனசுந்தரமும் இருந்தோம். அப்போது முசிறி போலீசார் அங்கு வந்து சம்பவ இடத்தை எங்கள் முன்பு பார்வையிட்டார்கள். அதை எழுதி படம் வரைந்து எங்களிடம் கையொப்பம் வாங்கினார்கள். அதில் நாங்கள் இருவரும் கையொப்பம் போட்டோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த பார்வை மகசர் இது தான். அந்த பார்வை மகசர் ***அ.தசா.ஆ.7*** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

திருச்சி - நாமக்கல் நெடுஞ்சாலைக்கு தென்புறம் காவிரி ஆறு அந்த பகுதியில் செல்கிறது என்றால் சரிதான். அந்த மெயின்ரோட்டில் இருந்து காவிரி ஆறு வரை உள்ளது ரீச் ரோடு தான். நான் கையெழுத்து போட்ட தாளில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று தெரியாது. போலீசார் கையொப்பம் கேட்டதால் போட்டேன்.

**மறுவிசாரணை - இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.